# <u>மாதிரி பண்ணை ஒப்பந்தம் – வாழை</u>

இந்த பண்ணை ஒப்பந்தம் (“ஒப்பந்தம்”) ............................... ஆல் (இதற்குப்பின் இது “நிறுவனம்” என குறிப்பிடப்படும்) தயாரிக்கப்பட்டு ...................................ஐ அதன் அலுவலக இடமாக கொண்டுள்ள இந்த **நிறுவனத்திற்கும்**

**<u>மற்றும்</u>**

விவசாயியின் பெயர்...................................

விலாசம் ....................................................<br>....................................................<br>....................................................

(இதற்குப் பின் இவர் “விவசாயி” என குறிப்பிடப்படுவார்)

**விவசாயிக்கும்** இடையே ஏற்படுத்தப்பட்டதாகும்.

(இதன் பிறகு ஒவ்வொரு விவசாயியும் மற்றும் நிறுவனமும் தனித்தனியாக “நபர்” எனவும், இருபிரிவினரும் சேர்ந்து “நபர்கள்” எனவும் குறிப்பிடப்படும்)

**<u>முகவுரை</u>**

அதாவது, இந்த நிறுவனமானது விவசாயிகளுடன் இணைந்து உலகத்தரம் வாய்ந்த முதிர்ந்த வாழைக்காய்களை இந்தியாவிற்குள்ளும் வெளியேயும் உற்பத்தி செய்ய நவீன விவசாய தொழில் நுட்பங்களையும், உற்பத்தி தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துவதில் தனது முக்கிய கவனத்தை செலுத்தும்.

அதாவது திரு/திருமதி...................................என்பவரின் மகன்/மகள்/ குமாரி...............................................என்ற விவசாயி .......................மாநிலம் (இந்தியா)..........................மாவட்டம்.....................தாலுகாவை சேர்ந்த ...................... என்ற கிராமத்தில் வசித்து வருகின்றார்.

இவருக்கு..........................மாநிலம் (இந்தியா) .................................... மாவட்டம் .............................தாலுகாவைச் சேர்ந்த................................என்ற கிராமத்தில் வருவாய் சர்வே எண்....................அதன்படி .......................ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. அந்த சொந்த நிலத்தில் வாழை பயிரிட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி அவரோ/அவளோ சிறந்த தரம் வாய்ந்த வாழைக் காய்களை உற்பத்தி செய்யவும் அவரது/அவளது விளைபொருட்களை சந்தைப்படுத்தி நல்ல விலை கிடைக்கச் செய்யவும் நிறுவனத்துடன் இணைந்து செயலாற்ற மிகவும் விருப்பமாக உள்ளார்.

எனவே இப்பொழுது இரு நபர்களும் இணைந்து கீழே குறிப்பிடப்படும் ஷரத்துக்களின்படி செயல்பட சம்மதிக்கிறார்கள்.

## 1. பொருள் விளக்கம்

1.1 ஒப்பந்தம் என்பது வாழை உற்பத்தி மற்றும் கொள்முதல் பற்றிய ஒப்பந்தம் என பொருள்படும்.

1.2 “வாழை” என்பது கிராண்ட் நைநி (G9) என்று அழைக்கப்படும் மோரிஸ் வகையைச் சேர்ந்த வாழையையோ அல்லது அந்த நிறுவனம் எந்த வாழை இனம் அப்பகுதியில் விவசாயத்திற்கு ஏற்றது என கருதுகின்றதோ அந்த வகை வாழையையோ குறிக்கும். அதுபற்றிய விபரங்களை நிறுவனமானது விவசாயிகளுக்கு எழுத்து மூலமாக ஒப்பந்த காலத்திற்குள் அவ்வப்பொழுது தெரிவிக்கும்.

1.3 **நபர்கள் :** நபர்கள் என்பது விவசாயியையும் நிறுவனத்தையும் குறிக்கும். நபர் என்பது விவசாயியையோ அல்லது அந்த நிறுவனத்தையோ குறிக்கும்.

1.4 **விளைபொருள் :** இங்கே விளைபொருள் என்பது அறுவடைக்குத் தயாராக இருக்கும் முதிர்ந்த வாழைக்காய்கள் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிலத்திலிருந்து அறுவடை செய்யப்பட்ட முதிர்ந்த வாழைக் காய்களைக் குறிக்கும்.

1.5 **விநியோக மையம் :** எந்த இடத்திலிருந்து விவசாயி வாழை தார்களை வெட்டி அனுப்புகின்றாரோ அந்த இடம் “விநியோக மையம்” என அழைக்கப்படுகின்றது.

1.6 **திட்டம் :** தற்போதைய ஒப்பந்தத்தின்படி விவசாயிகளால் செய்யப்படும் பண்ணை விவசாயத்தையும் மற்றும் செயல்பாட்டில் உள்ள ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்படும் என்ற நிறுவனத்தின் உத்திரவாதத்தினையும் குறிக்கும்.

1.7 அதிகபட்ச மீதி அளவு : இது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தில் குறிப்பிடப்படும் இரசாயனம் சேர்ந்திருக்கும் அளவைக் குறிக்கும் அல்லது வாழைப் பழங்களை சோதனை செய்ய இந்தியாவின் இதர சட்டப்படியான தர நிர்ணயத்தை குறிக்கும் அல்லது ஏற்றுமதி செய்வதாக இருந்தால் அப்பகுதியில் விளையும் வாழைப்பழங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச அளவிற்கு மேல் இருக்க கூடாது.

1.8 **“வெட்டு ஆணை”** நிறுவனத்தால் எழுதப்பட்ட கீழ்காணும் அறிவிப்புகள் “வெட்டு ஆணை” எனப்படும்.

அ) வாழைத்தார் வெட்டப்படும் நாள் மற்றும் நேரம்

ஆ) வாழைத்தாரின் தரம் மற்றும் வாழைக்காய்களின் முதிர்வு காலம்.

1.9 **மறுக்கப்பட்டவை :** நிறுவனத்தால் இணைப்பு IVல் குறிப்பிடப்பட்டுள்ள தர நிர்ணயத்தின்படி பொருந்தாத வாழைக்காய்களை நிராகரித்து விடப்படுவனவற்றை மறுக்கப்பட்டவை என்கிறோம். இவற்றை நிறுவனம் கொள்முதல் செய்வதில்லை.

1.10 **நிறுத்தல் ஆணை :** நிறுவனத்திற்கு அறுவடை செய்து வழங்க வேண்டிய வாழைத் தார்களை நிறுத்தி விடும்படி எழுத்து மூலமாக எந்த நேரத்திலும் நிறுவனத்தினால் வழங்கப்படலாம். அல்லது முன்பு வழங்கப்பட்ட வெட்டு ஆணையின்படி அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நிறுவனம் கூறிய நிபந்தனைகளுக்கு உட்படாமலோ அல்லது சொல்லப்பட்ட விவசாய தொழில்நுட்பங்களை விவசாயி கடைப்பிடிக்கவில்லை என்றாலோ இணைப்பு IIIன்படி சிவப்பு தர நிர்ணயம் வழங்கப்பட்டு எந்த நேரத்திலும் வாழைத்தார்களை வெட்ட வேண்டாம் என நிறுவனம் நிறுத்தல் ஆணை வழங்கலாம்.

1.11 கம்பெனியினை “மூடுதல்” “கலைத்தல்” “திவாலாதல்” அல்லது “மறுசீரமைத்தல்” என்பது போன்ற சட்டபூர்வ நடவடிக்கைகளை அந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்ட இடத்தின் வரம்பிற்குள் அல்லது நிறுவனம் மேற்கொள்ளும் வியாபார இடத்தின் வரம்பிற்குள் இத்தகைய நடவடிக்கையினை எடுக்க கோரலாம்.

## 2. ஒப்பந்த காலம்

2.1 இந்த ஒப்பந்தம்...........................ந் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

2.2 இரு நபர்களும் இணைந்து ஒரு பயிர்பருவ காலம் முழுவதும் அதாவது பதப்படுத்தும் காலம், உள்ளூர் சந்தையில் விற்பனை செய்தல் அல்லது வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தல் போன்ற வேலைகளிலும் இணைந்தே பணி செய்வோம் என இந்த நபர்களும் சம்மதிக்கிறார்கள். அவர்/அவள் தனது நிலத்தினை வாழை உற்பத்திக்காக வழங்குகிறேன் என்றும் ஒப்பந்த காலம் முழுவதும் தொடர்ந்து நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவேன் எனவும் விவசாயி உறுதியளிக்க வேண்டும்.

2.3 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் அறுவடை காலம் வரை இணைந்தே பணி செய்வோம் என இந்த நபர்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டும். இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த இரு நபர்களும் அடுத்த ஆண்டிற்கும் இந்த ஒப்பந்தத்தினை தொடரலாமா அல்லது நிறுத்திவிடலாமா என்பதனை பரஸ்பர பேச்சு வார்த்தை மூலம் தீர்மானித்துக் கொள்ளலாம்.

2.4 இந்த ஒப்பந்தம் இரு நபர்களுக்கும் திருப்தியளிக்குமானால் கலந்து பேசி அடுத்த பயிர் பருவ காலத்திற்கும் கால நீடிப்பு செய்து கொள்ளலாம்.

## 3. பண்ணை விளைபொருள் பற்றிய விளக்கம் :

இந்த ஒப்பந்தம் கிராண்ட் நைநி (G9) என்று அழைக்கப்படும் மோரிஸ் வகையைச் சேர்ந்த வாழைப்பழத்தை மட்டுமே குறிக்கும் அல்லது அப்பகுதியில் விவசாயத்திற்கு பொருந்தக்கூடிய நிறுவனம் விரும்பும் இதர வகை வாழையினையும் குறிக்கும்.

## 4. **தர நிர்ணயம் :**

4.1 இணைப்பு IVல் குறிப்பிடப்பட்டபடி முதிர்ந்த வாழைக் காய்களின் தரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். கீரல் விழுந்த, உடைந்த, மிகவும் முதிர்வடைந்த, பழுதடைந்த மற்றும் நிறம் மாறிய தோல்கள் உள்ள முதிர்வடைந்த வாழைக்காய்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4.2 சூரிய ஒளியினால் வெம்பிப்போன வாழைக்காய்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4.3 இணைப்பு IVல் குறிப்பிடப்பட்டுள்ள தர நிர்ணயித்தின்படி இல்லாத அனைத்து விளைபொருட்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**5. விவசாயிகளின் பணியும் பொறுப்புகளும் :**

5.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட நிலத்தில் இணைப்பு IVல் தெரிவித்துள்ள நிறுவனத்தின் தர நிர்ணயப்படி விவசாயி வாழை பயிரிடவும் அறுவடை செய்யவும் சம்மதம் தெரிவிக்கிறார். நிறுவனத்தின் தலையீடு ஏதும் இல்லாமல் விவசாயி பயிரிடுவதற்கு தன் விருப்பப்படி விரும்பியவரிடமிருந்து திசு உற்பத்தி வாழைக் கன்றுகள் கொள்முதல் செய்து சாகுபடி செய்யலாம்.

5.2 நிறுவனத்தால் அல்லது தொழில்நுட்ப உதவியாளர்களால் பரிந்துரைக்கப்படும் விவசாய தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தும் புதிய உற்பத்தி முறைகளையும் விவசாயி நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் நிறுவனம் அல்லது தொழில்நுட்ப உதவியாளர்கள் பரிந்துரைக்கும் கருவிகளையும், ரசாயனங்களையும் உபயோகப் படுத்தியும் சட்டப்படிஉள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளையும் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். நிறுவனமானது இத்தகைய நடைமுறைகளையும் செயல்பாடுகளையும் எழுத்துமூலமாக விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். அதே நேரத்தில் திட்டத்தினை செயல்படுத்தும் பொழுது மேற்கூறிய நடைமுறைகளில் மாற்றம் செய்து கொள்ளலாம்.

5.3 விவசாயி தனது முயற்சியாலும், சொந்த செலவிலும் திட்டத்தின்படி அனைத்து வளர்ச்சியையும், அறுவடைக்கு முன்பும் பின்பும் கீழ்காணும் எல்லா செயல்களையும் செய்ய கடமைப்பட்டுள்ளார். அதாவது நிலத்தை சீர்படுத்துதல், அடிப்படை வசதியினை மேம்படுத்துதல், தரமான பயிரினை விளைவிக்க ஏற்பாடு செய்தல், பயிர் வளர்த்தல், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், பழப் பாதுகாப்பு செயல்பாடுகள், உரமிடுதல் மற்றும் நுண்ணுயிர் ஊட்டச்சத்து ஏற்பாடு செய்தல், சொட்டுநீர் பாசனமுறை மற்றும் மேலாண்மை, நீர்பாசன வசதி, களை தடுப்பு மற்றும் மேலாண்மை, சுத்தமாக வைத்திருத்தல், நோய் தடுப்பு மற்றும் பூச்சிக் கொல்லி மேலாண்மை, அறுவடை மற்றும் தரமான விளைபொருளை உற்பத்தி செய்வதற்கான அனைத்துவகை நடவடிக்கைகளையும் விவசாயி மேற்கொள்ள வேண்டும்.

5.4 அறுவடை சமயத்தில் விளைந்த வாழைத்தார்களை வெட்டுவதற்காக நிறுவன பிரதிநிதியின் மேற்பார்வையில் வெட்டுக் கூலி ஆட்களையும் தேவையான கருவிகளையும் விவசாயியே ஏற்பாடு செய்ய வேண்டும்.

5.5 எனினும், நிறுவனமே தனது சொந்த செலவில் கீழ்காணும் வாழை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேலை ஆட்களை ஏற்பாடு செய்யலாம். பராமரிப்பு பணிகளான வாழைக்கு ஊசிபோடுதல், வாழைத்தார் மருந்து தெளிப்பு, வாழைப்பூவினை பறித்தல், பழம் வெம்பிப் போவதை தடுத்தல், குலை தள்ளாத வாழைகளை அகற்றுதல், கயிறு கட்டி வைத்தல், வாழைத்தாருக்கு அண்டை கொடுத்தல் போன்ற வாழைமர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரடியாகவோ அல்லது முகவர்கள் மூலமாகவோ தேவையான வேலை ஆட்களை நிறுவனமே அதன் செலவில் பணியமர்த்தலாம். விவசாயிகளும் தேவையான வேலையாட்களை குறிப்பிட்ட நேரத்தில் பணியமர்த்தி வாழை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு குறித்த காலத்தில் செயல்படுத்த பொறுப்பாவார்கள். ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனையின்படி பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுவனம் நேரடியாகவோ, கடனுதவி செய்தோ, அரசு மூலமாகவோ, நிறுவனம் முன்பணம் வழங்கியோ, விவசாயி தன் சொந்த செலவிலோ மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளார்கள்.

5.6 விவசாயி தன் சொந்த செலவில் சூரிய ஒளி நேரடியாக வாழைத்தாரின் மீது விழாமல் இருக்க அதனை காகிதத்தால் சுற்றி வைக்க வேண்டும்.

5.7 வாழைத்தார்கள் சாய்ந்துவிடாமலும் விழுந்துவிடாமலும் இருக்க தேவையில்லாத பிஞ்சு காய்களை வெட்டியும் சாயாமல் இருக்க பாதுகாப்பு ஏற்பாடும் விவசாயிகளே செய்ய வேண்டும்.

5.8 விவசாயி தனது சொந்த செலவில் பயிர் காப்பீடு செய்துகொள்ள வேண்டும்.

5.9 விவசாயி தனது சொந்த செலவில் மண் பரிசோதனை, இலை மற்றும் நீர் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

5.10 விவசாயிகள் உலக சிறந்த விவசாய சாகுபடிமுறை சான்றிதழ் தேவைப்பட்டால் அதை பெறுவதற்கான செயல்பாடுகள் அனைத்தையும் விவசாயிகள் செய்ய வேண்டும்.

5.11 வாழைத்தாரில் தேவையற்ற பொருள்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவில் உள்ளதா என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை விவசாயி எடுத்துக் கொள்ள வேண்டும்.

5.12 உற்பத்தி செய்யப்பட்ட பின்பு நிறுவனமானது தனது சொந்த செலவில் வாழைத்தார்கள் தரநிர்ணயப்படி உள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5.13 நிறுவனம் தனது சொந்த செலவில் அறுவடைக்குப் பின் கீழ்காணும் செயல்களை செய்ய வேண்டும்.

5.13.1 விளைநிலத்திலேயே பிரித்தல் / தரம் பிரித்தல்

5.13.2 விளைபொருள்களை மத்திய விநியோக நிலையத்திற்கு எடுத்துச் செல்லுதல்

5.13.3 ஈரப்படுத்தி பின்பு குளிர்பதன கிடங்கில் வைத்தல்

5.13.4 கட்டும் பணிகளை மேற்கொள்ளும் இடம்.

5.13.5 ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு விற்பனை மேற்கொள்ளல்.

5.14 தரம் வாய்ந்த விளைபொருட்களைப் பெறுவதற்கு நிறுவனம் அதிக அனுபவம் பெற்ற விவசாய தொழில்நுட்ப வல்லுனர்களை ஏற்பாடு செய்யும்.

5.15 இத்திட்டத்தில் அரசின் கொள்கைப்படி திட்டத்தில் பங்குபெறும் ஒருங்கிணைந்த தகுதிவாய்ந்த விவசாய பெருமக்களுக்கு உதவும் வகையில் தோட்டக் கலைத் துறையுடன் இணைந்து நிதி வசதி செய்து தர நிறுவனம் ஏற்பாடு செய்கின்றது. நிதி உதவி விரைவில் பெறுவதற்காக தேவையான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை விவசாயிகளுக்கு வழங்கி நிறுவனம் உதவிபுரிகின்றது.

5.16 மாநில/மத்திய அரசுகளின் ஒத்துழைப்புடன் அல்லது நிறுவனத்தின் செலவில் விவசாயிகளுக்கு பயிற்சி, கள ஆய்வு மற்றும் செய்முறைப் பயிற்சி விளக்கம் போன்றவற்றிற்கு நிறுவனம் அமைத்துக் கொடுக்கின்றது.

5.17 விவசாயிகள் எந்தவித நஷ்டத்திற்கும் அல்லது நிறுவன ஒப்பந்த தேதிக்குப் பின் ஏற்படும் எந்தவித சேதத்திற்கும் பொறுப்பேற்க மாட்டார்கள். நிறுவனமே அனைத்து செலவுகளுக்கும் மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படுகின்ற அனைத்து இடர்பாடுகளுக்கும், விற்பனைக்கும், சரக்கினை பராமரிப்பதற்கும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளுக்கு எதிராக எந்த வாசகமும் விவசாயிக்கு எதிராக ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கக் கூடாது.

5.18 ஏதாவது நஷ்டம் ஏற்பட்டாலோ, வாழை உற்பத்தியில் சேதம் ஏற்பட்டாலோ, நிறுவனத்தால் வழங்கப்பட்ட இடு பொருள்களினால் விளைநிலம் மற்றும் சொத்துக்கள் மீதான வழக்கு செலவு ஏற்பட்டாலோ அதற்கு நிறவனமே பொறுப்பாகும்.

## 6. விளைபொருளை கொண்டு சேர்த்தல்

6.1 அறுவடையானது (வாழைத்தார் வெட்டுதல்) நிறுவனமும் விவசாயியும் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் திட்டமிட்டபடி நடைபெறும் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் அறுவடை செய்யப்படும். விவசாயி ஒப்பந்த காலத்தில் தாமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ நிறுவனத்திற்கு விற்க வேண்டிய விளைபொருளினை மற்றவருக்கு அதில் ஒரு பகுதியினை இதர பொருள்கள்/பழங்கள் போன்றவற்றுடன் சேர்த்து விற்பனை செய்ய முயற்சிக்க கூடாது. அவ்வாறு நிறுவனத்தின் சம்மதம் மற்றும் முன்னிலையில் இல்லாமல் அறுவடைப் பணி விவசாயியால் மேற்கொள்ளப்பட்டால் அது நிறுவனத்திற்கும் விவசாயிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்த முறிவாக கருதப்பட்டு நிறுவனமானது ஒப்பந்த முறிவிற்கான தகுந்த மேல் நடவடிக்கையினை தொடரும்.

6.2 விவசாயி தனது செலவில் வாழைத் தார்களை அறுவடை செய்ய / வெட்ட தேவையான கூலி ஆட்களை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

6.3 வாழை வயலில் இருந்து வெளியில் அமைந்துள்ள பொருள் ஏற்றும் இடம் வரை வாழைத் தார்களையும் / வாழைக்காய் கொத்துக்களையும் கொண்டு செல்ல தற்பொழுது நிலவும் விலையில் கிலோ ஒன்றிற்கு ரூ.................. (அ+ஆ+இ ஆகியவற்றின் எடை) என நிர்ணயம் செய்து தேவையான வேலையாட்களை நிறுவனமே ஏற்பாடு செய்ய வேண்டும்.

6.4 போக்குவரத்து வண்டியால் நேரடியாக வயலுக்கு செல்வதற்கு பாதைகள் இல்லையென்றால் விவசாயி அந்த வாழைத்தார்களை ஏற்ற தயார் செய்யும் அல்லது பதப்படுத்தும் இடத்திற்கு எடுத்துச் செல்லும் ஏற்பாட்டினை செய்யவும் அதற்கான செலவுத் தொகையினை நிறுவனம் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

6.5 விவசாயியின் வயலில் குறித்த நேரத்தில் வாழை பதப்படுத்துதலுக்கு தேவையான நீருக்கு விவசாயி ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான செலவுத் தொகையினை நிறுவனம் ஏற்றுக் கொள்ளும்.

6.6 விளைபொருட்களை இணைப்பு IVன்படி நிறுவனம் அ, ஆ & இ என பிரிக்கின்றது. தர நிர்ணயம் மற்றும் வகைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான செலவினங்களை நிறுவனமே ஏற்றுக்கொள்ளும்.

6.7 ஒப்பந்தத்தின்படி மூன்றாவது நபரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நிறுவனம் விளைபொருளின் தரம் மற்றும் கட்டுமானம் பற்றிய முடிவினை மேற்கொள்ளும்.

6.8 திட்டம் செயல்பாட்டில் உள்ளபோது, நிறுவனம் பண்ணை ஒப்பந்தத்தின்படி இணைப்பு IVன்படி உள்ள குறைந்தபட்ச தர நிர்ணயம் செய்யப்பட்ட விளைபொருட்களையும் விவசாயியிடமிருந்து கொள்முதல் செய்ய நிறுவனம் கடமைப்பட்டுள்ளது.

6.9 நிறுவனம் ஒவ்வொரு வாரமும் அந்த வாரத்தில் வெட்டப்பட வேண்டிய வாழைத்தார் எண்ணிக்கைப் பட்டியலினை தயார் செய்து விவசாயிக்கு தெரிவிக்கும். அதன்படி விவசாயியும் வெட்டு ஆணையினை பின்பற்றி வயலிலிருந்து நிறுவனத்தின் போக்குவரத்து வாகனம் வரை அறுவடை செய்யப்பட்ட வாழைத்தார்களை கொண்டு வர வேண்டும்.

## 7. விலை நிர்ணயம் செய்தல்

7.1 **விருப்ப தேர்வு 1 :** இணைப்பு IVல் தெரிவித்துள்ள தர நிர்ணயித்தின்படி உள்ள முதிர்ந்த வாழைக்காய்கள் நிறுவனத்தால் உத்திரவாதம் அளிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையான ரூ……………………..க்கு கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

**விருப்ப தேர்வு 2 :** இணைப்பு IVல் குறிப்பிட்டபடி தர நிர்ணயம் செய்யப்பட்ட முதிர்ந்த வாழைக்காய்களை பரஸ்பரம் சம்மதித்த விலையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட விலையானது குறைந்தபட்ச உத்திரவாத ஆதரவு விலை நிர்ணயத்தைவிட குறைவாக இருத்தல் கூடாது.

**விருப்ப தேர்வு 3 :** இணைப்பு IVல் குறிப்பிட்டபடி தர நிர்ணயம் செய்யப்பட்ட முதிர்ந்த வாழைக்காய்களை அந்தப் பகுதியில் நிலவும் சந்தை விலையில் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட விலையானது குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட குறைவாக இருத்தல் கூடாது.

**விருப்ப தேர்வு 4 :** இணைப்பு IVல் தெரிவித்துள்ள தர நிர்ணயத்தின்படி தகுதியுள்ள முதிர்ந்த காய்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும்போது பரஸ்பர சம்மதத்துடன் நிர்ணயம் செய்த விலை மற்றும் அவ்வாறு பரஸ்பர சம்மதத்துடன் நிர்ணயம் செய்யப்பட்ட விலையைவிட சந்தை விலை ஒரு குறிப்பிட்ட அளவு அதிக விலை ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதாவது சந்தை விலையானது ஒரு குறிப்பிட்ட அளவில் பரஸ்பர சம்மத விலையைவிட அதிகம் இருந்தால் மாற்றம் ஏதும் செய்யப்பட தேவையில்லை. பரஸ்பர சம்மதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே கொள்முதல் செய்யப்படலாம். அப்படியில்லாமல் தற்போதைய சந்தை விலை குறிப்பிட்ட விலை ஏற்றத்திற்கும் அதிகமாக இருந்தால் விலை ஏற்றத்தில் குறிப்பிட்ட சதவீத விலை ஏற்றமானது பரஸ்பர சம்மத விலையுடன் சேர்த்து விவசாயிக்கு வழங்கும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 8. பணம் செலுத்தும் நிபந்தனைகள்

8.1 விளைபொருட்கள் பெறப்பட்டதும் அதற்கான தொகையினை நிறுவனம் உடனடியாக வழங்க வேண்டும். விற்பனையாளரின் ரகசிய எண் கணக்கு உருவாக்கப்பட்டு விற்பனையாளரின் விபரம் பதிவு செய்யப்பட்டு அவ்விபரம் விவசாயிக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். விவசாயி அவருடைய ஆதார் எண், வங்கி கணக்கு விபரம், (ரொக்கம் வழங்கப்பட கூடாது) இந்திய நிதியமைப்பு குறியீட்டு எண் (IFSC Code) மற்றும் நிகழ்நேர மொத்த பரிவர்த்தனை (RTGS) விவரங்கள் தெரிவதற்காக ரத்து செய்யப்பட்ட காசோலை ஆகியவற்றை கொடுக்க வேண்டும்.

## 9. இரகசியம் காத்தல் மற்றும் போட்டியின்மை

9.1 தேவையான விவசாய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், திட்டத்தினை நிறைவேற்ற மற்றும் செயல்படுத்துவதற்கான விபரங்களை சேகரிக்கவும் நிறுவனம் கணிசமான தொகையினை முதலீடு செய்துள்ளது என்பதனை விவசாயி தெளிவாக தெரிந்து வைத்துள்ளார். எனவே விவசாயி திட்டம் சம்பந்தமான ஏதாவது அல்லது அனைத்து விபரங்களையும் ரகசியமாக வைத்திருக்க வேண்டியது மிக முக்கியமான பணியாகும். விவசாய தொழில் நுட்பங்கள், வாழைப் பயிர் வளர்ச்சிக்கு தேவையான தொழில்நுட்ப விபரங்கள், அறுவடைக்கு முன்பு மற்றும் பின்பு உள்ள தொழில் ரகசியங்கள், பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் நபர்களுக்கிடையே ஏற்பட்ட வணிக விபரங்கள் ஆகியவற்றை எல்லாம் விவசாயி ரகசியமாக பேண வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் ஒப்பந்தத்தின்படி திட்டத்தினை நிறைவேற்ற உபயோகப்படுத்த வேண்டுமே தவிர நிறுவனத்திடம் ஒத்துக்கொண்டபடி இதர வகையில் விவசாயி இவற்றை வெளியிடக்கூடாது.

9.2 ஒப்பந்த காலத்தில் விவசாயி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உலகில் எந்த பகுதியிலிருந்தும் நிறுவனத்திற்கு எதிராக போட்டியிடக் கூடாது. அது மட்டுமல்லாமல் விவசாயி இத்தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வளர்ச்சி, பதப்படுத்துதல், வாழைக்காய் விற்பனை போன்ற செயல்களை மூன்றாம் நபருடன் சேர்ந்து இந்தியாவிலும் அல்லது வெளிநாட்டிலும் நடைமுறைப்படுத்தக் கூடாது. மேலும் ஒப்பந்த காலம் முடிந்தபின்பு விவசாயி தாமாகவோ அல்லது இதர நபர்களுடனோ சேர்ந்து நிறுவனத்திற்கே சொந்தமான தொழில்நுட்ப இரகசியங்களை உலகத்தின் வேறு எந்த பகுதியிலும் வாழைக்காய் வளர்ச்சிக்கும் விற்பனைக்கும் பயன்படுத்த முயற்சி செய்யக்கூடாது.

9.3 ஒப்பந்த காலம் நடைமுறையில் உள்ளபோது விவசாயி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிறுவனத்தை தவிர இதர எந்த நபருக்கும் வாழைக்காய்களை விற்பனை செய்யக்கூடாது. அவ்வாறு வெளி நபர்களுக்கு விற்பனை செய்ய வேண்டுமெனில் காரணத்தை தெரிவித்து நிறுவனத்தின் எழுத்துபூர்வமான ஒப்புதலின்பேரில் செய்யலாம். நிறுவனத்தால் ஏற்கப்படாத வாழைக்காய்களை விற்பனை செய்வதற்கு எந்தவித எழுத்து பூர்வமான ஒப்புதலும் தேவையில்லை.

## 10. விவசாயிகளின் உரிமையினை பாதுகாத்தல்

10.1 இந்த ஒப்பந்தமானது விவசாயியின் நில உரிமையையும் சொத்துரிமையையும் எந்த விதத்திலும் பாதிக்காது.

10.2 விவசாயியின் நிலத்தில் ஏதாவது கட்டிடங்கள், கட்டப்பட்டிருந்தால் ஒப்பந்த காலம் முடிந்தவுடன் நிறுவனத்தின் செலவில் அனைத்து கட்டிடங்களும் இடிக்கப்பட்டு அகற்றப்பட்டுவிடும்.

10.3 இயற்கை பேரிடர் காரணமாக பயிர் விளைச்சலில் நஷ்டம் ஏற்பட்டு நிறுவனத்திற்கு விளைபொருட்களை அனுப்பாத காரணத்தால் அதற்கும் நஷ்டம் ஏற்பட்டால் அவ்வாறு விளைபொருளை அனுப்பாததற்காக விவசாயி பொறுப்பாக மாட்டார்.

## 11. தகராறுகளை தீர்த்து வைக்கும் முறை

11.1 ஒப்பந்தம் தொடர்பாக அல்லது ஒப்பந்தத்தினால் ஏதாவது தகராறுகள், முரண்பாடுகள், வேறுபாடுகள் ஏற்பட்டால் இந்த நபர்கள் முதல் முயற்சியாக அத்தகைய தகராறுகளை, முரண்பாடுகளை, வேறுபாடுகளை சமரச தீர்வின் மூலமாக சுமுகமாக முடித்துக் கொள்வார்கள்.

11.2 முப்பது நாட்களுக்குள் பரஸ்பர சம்மதத்தின் மூலம் தகராறுகள் தோல்வியடைந்துவிட்டால் அதன் பின்பு அத்தகராறு, முரண்பாடு அல்லது அந்த முட்டுக்கட்டை முடிவாக விவசாயிகளின் விளைபொருள் விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைகள் சட்டம் 2020 மற்றும் விலை உறுதி மற்றும் பண்ணை சேவைகள் [தகராறு தீர்மானம்] விதிகள் 2020ன்படி நியமனம் செய்யப்பட்ட தகுதிவாய்ந்த நடுவர்களால் தீர்த்து வைக்கப்படும்.

## 12. இதர விபரங்கள்

12.1 விவசாயி தனிப்பட்ட நபராக இருக்கின்றார் மற்றும் இருப்பார். இந்த ஒப்பந்தம் ஓர் அமைப்பினை, கூட்டு வியாபாரத்தை/கூட்டுத் தொழிலை உருவாக்கு வதற்காகவோ அல்லது முதல்வர் முகவர் தொடர்பு அல்லது முதலாளி தொழிலாளி தொடர்பு ஏற்படுவதற்காகவோ என கருதுதல் கூடாது.

12.2 இந்த ஒப்பந்தத்தில் இரு நபர்களின் எழுத்து பூர்வமான சம்மதமின்றி திருத்தம் செய்யவோ அல்லது மாற்றி அமைக்கவோ கூடாது.

12.3 இணைப்புக்கள் உட்பட இந்த ஒப்பந்தமானது இரு நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட முழுமையடைந்த ஷரத்துக்கள் அடங்கிய ஓர் ஒப்பந்தம் ஆகும். எனவே இப்பொருள் தொடர்பாக இதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், ஏற்பாடுகள் மற்றும் புரிதல்கள் இவ்விரு நபர்களுக்கும் இடையே போடப்பட்டிருந்தால் அவை செல்லாது.

2.4 எந்த நபரும் ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்களில் மற்ற நபரின் எழுத்துப்பூர்வமான சம்மதமின்றி அதில் குறிப்பிட்டுள்ள அனைத்தையுமோ அல்லது சில பகுதிகளான அதன் பொறுப்புகளையோ அல்லது உரிமை களையோ மாற்றம் செய்யக்கூடாது.

12.5 அந்த ஒப்பந்தமானது இரண்டு அசல் நகலில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த நகல்கள் இரண்டுமே அசல் நகலாகவும் ஆனால் ஒரே ஆவணமாகவும் கருதப்பட வேண்டும்.

12.6 ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் தலைப்புகளானது எளிதாக புரிந்து கொள்ளும் வசதிக்காகவே பயன்படுத்தப்படுகிறதே தவிர இந்த ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்களுக்கு மாறுபாடாக அர்த்தம் கொள்ளக் கூடாது.

12.7 இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் இந்த நபர்களின் நன்மைக்காகவும் மற்றும் அவர்களை மட்டுமே கட்டுப்படுத்துமே தவிர இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் எதுவும் அந்நபர்களின் வாரிசுகளுக்கு பொருந்தாது. மேலும் மாற்றித் தரவும் இயலாது. ஒரு நபர் [அவருடைய பொறுப்பிலிருந்து விடுபடாமல்] உண்மையிலேயே தொழில் மற்றும் சொத்துக்களுக்கு வாரிசு உரிமை பெற்ற ஒரு மூன்றாம் நபருக்கு இந்த ஒப்பந்தத்தினை மாற்றி வழங்கலாமே தவிர மற்ற எக்காரணத்திற்கும் எந்த நபரும் மற்ற நபருக்கு எழுத்துபூர்வமான ஒப்புதல் இன்றி மாற்றித் தர இயலாது.

12.8 இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்துக்கள் ஏதேனும் தகுதியிழந்தோ, சட்டத்திற்கு புறம்பாகவோ, அல்லது செயல்படுத்த இயலாமலோ ஆகிவிடும் சமயத்தில் அதனை தகுதிவாய்ந்த, சட்டத்திற்குட்பட்டு அல்லது செயல்படுத்தும் வகையில் தகுந்த மாற்றம் செய்து அந்த நபர்களின் விருப்பத்தின்படி அதனை நீடிக்கச் செய்து நடைமுறைப்படுத்தும் வகையில் அதனை செய்ய வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யும்பொழுது இதர ஷரத்துக்கள் ஏதேனும் அதனுடைய தகுதியோ, சட்டப்படியோ அல்லது செயல்படுத்துவதிலோ எந்த வகையிலும் தடங்கலோ அல்லது பாதிக்கப்படவோ கூடாது.

12.9 ஒப்பந்தத்தில் இரு நபர்களாலும் எழுத்து மூலமாகவும் கையொப்பமிட்டும் திருத்தங்கள் மேற்கொள்ளலாமே தவிர ஒப்பந்தத்தின் ஷரத்துக்களில் ஏதாவது திருத்தங்கள் செய்திருந்தால் அவற்றை செயல்படுத்த இயலாது. இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் எதையாவது விட்டுக் கொடுக்க வேண்டுமெனில் அதற்கும் இரு நபர்களின் எழுத்துபூர்வமான சம்மதமும் அவர்களின் கையொப்பமும் இருந்தால் தவிர அந்த ஷரத்தினை தள்ளுபடி செய்தல் இயலாது. எந்த ஒரு நபரும் ஒப்பந்த முறிவினை விட்டுக் கொடுக்க இயலாது. அவ்வாறு விட்டுக் கொடுத்ததாக கருதினாலும் அச்செயலினால் மற்ற நபரின் உரிமை ஏதும் பாதிக்கப்பட மாட்டாது.

12.10 இந்த நபர்களுக்கு அனுப்பப்படும் அறிவிப்பானது எழுத்து மூலமாகவும் சரியான முறையில் சென்றடையும் வகையிலும் இருக்க ஒப்புதல் அட்டையுடனான பதிவுத்தபால் மூலமாக அல்லது கீழ்காணும் விலாசத்தில் சென்று நேரடியாக கொடுக்கவும் செய்யலாம்.

**நிறுவனம்**

………………………………

………………………………

………………………………

விவசாயி

விவசாயியின் பெயர் ………………………………

விலாசம் ………………………………

………………………………

………………………………

12.11 இந்த ஒப்பந்தத்தில் அடங்கிய மற்றும் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் தவிர ஒப்பந்தங்களில் வேறு ஷரத்துக்கள் “விவசாயி விளைபொருள் விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவை பாதுகாப்புச் சட்டம் 2020க்கு மீறியதாக இருந்தால் அவை செல்லத்தக்கது ஆகாது. அவ்வாறு ஒப்பந்தம் செல்லாததாக ஆகிவிட்டால் நிதி இழப்பு ஏதேனும் ஏற்பட்டிருந்தால் அதனை நிறுவனமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சாட்சிகளுடன் இருநபர்களும் ஒத்துக்கொண்டு இந்த ஒப்பந்தத்திலும் இதன் அசல் நகலான மற்றொன்றிலும் மேலே எழுதப்பட்ட நாள் மற்றும் வருடத்தில் அவரவர் கையொப்பத்தினை செய்கின்றார்கள்.

கையொப்பமிட்டு என்னால் வழங்கப்படுகிறது.

“விவசாயி”

என்பவரின் முன்னிலையில்

கையொப்பமிட்டு வழங்கப்படுகிறது

“நிறுவனம்”

நிறுவனத்திற்காக

(ஒப்புதல் பெற்றவரின் கையொப்பம்)

என்பவரின் முன்னிலையில்

## இணைப்புகளில் பட்டியல்

| | | |
|---|---|---|
| இணைப்பு I | - | வாழைத்தார்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் அறுவடையின் போது தரம் பிரிக்கும் வழிமுறைகள் |
| இணைப்பு II | - | எடை போடுதலும் பணம் வழங்கும் வழிமுறைகளும் |
| இணைப்பு III | - | வாழைத்தோட்டத்தில் மதிப்பீடு செய்யப்படும் மாதிரி கணக்கீடு. |
| இணைப்பு IV | - | முதிர்ந்த வாழைக்காய்களை தர நிர்ணயம் செய்யும் அளவீடுகள். |

## இணைப்பு - I

வாழைத் தார்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அறுவடையின்போது தரம் பிரிக்கும் வழிமுறைகள்

1. ஏற்றுக் கொள்ளப்படும் வாழைத்தார்கள் :
   – பரஸ்பரம் சம்மதித்த பரிசோதனை முறையினை விளக்குதல்
2. பகுதியாக ஏற்றுக் கொள்ளப்படும் வாழைத்தார்கள் :
   – பரஸ்பரம் சம்மதித்த பரிசோதனை முறையினை விளக்குதல்
3. மறுக்கப்பட்ட வாழைத்தார்கள் :
   – பரஸ்பரம் சம்மதித்த பரிசோதனை முறையினை விளக்குதல்

## இணைப்பு - II

எடை போடுதலும் பணம் வழங்கும் வழிமுறைகளும் :

அ. எடை போடுதல் :

(i) ஏற்கப்பட்ட வாழைத்தார்கள் மட்டுமே வெட்டப்பட்டு அதன் அடிப்பாகத்திலுள்ள பிஞ்சு காய் சீப்புகள் நீக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட வாழைக்காய் சீப்புகள் மட்டும் பெட்டியில் / கூடைத் தட்டில் போடப்பட்டு எடை போடப்படும்.

(ii) அறுவடை மேற்பார்வையாளர் விவசாயி அல்லது அவரின் பிரதிநிதியின் முன்பாக நிகர எடையினை பதிந்து வைத்துக்கொள்வார்.

(iii) பெட்டிகளுடன் / கூடைத்தட்டுக்களுடன் பாரம் ஏற்றப்பட்ட வண்டி விவசாயியின் சொந்த செலவில் எடை நிலையத்தில் மொத்த எடை போடப்படும். அதன் பின்பு கட்டும் பொருள்களான பெட்டிகள் / கூடைத் தட்டுகள் போன்றவற்றின் எடையினை கழித்துவிட்டு வாழைக்காய்களின் நிகர எடையினை கணக்கிடுவார்கள்.

ஆ : பணம் வழங்குவதற்கான வழிமுறைகள் :

| **கொள்முதல் செய்யும் பொருள் விபரம்** | **தொகை கணக்கிடுதல்** |
|---|---|
| வாழைக்காய்களின் ஒரு பகுதி (நல்ல தரம் வாய்ந்தவை) | அடிப்படை மதிப்பு (ஆ1) : நிகர எடை கி (I + II + III) பரஸ்பரம் ஒத்துக் கொள்ளப்பட்ட சந்தை விலை (ரூ………../கி) சந்தை விலையானது இருவரால் ஒத்துக் கொண்ட அறுவடை செலவினை கழித்து நிர்ணயிக்கப்படும். அதாவது அறுவடை செய்யப்பட்ட வாழைக்காய்களின் மொத்த கொள்ளளவு (I + II + III) மீதான மதிப்பு ரூ……. கி. ஒன்றிற்கு |

## இணைப்பு - III

வாழைத் தோட்டத்தில் மதிப்பீடு செய்யப்படும் மாதிரி கணக்கீடு

அ. மாதாந்திர மதிப்பீடு மற்றும் அறிக்கைகள் :
– பரஸ்பர மதிப்பீடு செய்யும் முறையினை விளக்குதல்

ஆ. தர வரிசை செய்யப்படும் முறை :
– பரஸ்பர மதிப்பீடு செய்யும் முறையினை விளக்குதல்

## இணைப்பு - IV

வாழைக்காய்களை தரம் பிரிக்கும் விதிகளும் நிபந்தனைகளும் :

(i) வகுப்பு – அ–வின்படி ஏற்றுக் கொள்ளக்கூடிய சேதம்
– சேதம் பற்றிய விபரமும் எந்த அளவிற்கு சேதத்தை பரஸ்பர முடிவின்படி ஏற்றுக்கொள்ள இயலும் என விளக்குதல்

(ii) வகுப்பு – ஆ–வின்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய சேதம்
– சேதம் பற்றிய விபரமும் எந்த அளவிற்கு சேதத்தை பரஸ்பர முடிவின்படி ஏற்றுக்கொள்ள இயலும் என விளக்குதல்

(iii) பூஜ்ய அளவு சேதம்
– சேதம் பற்றிய விபரமும் எந்த அளவிற்கு சேதத்தை பரஸ்பர முடிவின்படி ஏற்றுக்கொள்ள இயலும் என விளக்குதல்

(iv) வாழைக்காய்களின் வயது, அதன் தடிமண் (சதைப்பற்று), நீளம், வாழைச் சீப்பில் உள்ள காய்களின் எண்ணிக்கை மற்றும் அறுவடைப் பருவத்தில் செயல்படும் இலைகளின் எண்ணிக்கை.

| | |
|---|---|
| வாழைக்காய்களின் வயது / வாரங்களில் | தர நிர்ணய துறையிலிருந்து வழங்கப்படும் வெட்டு ஆணையினைப் பொருத்தும் பருவ நிலையினை அனுசரித்தும் (8 முதல் 16 வாரங்கள் வரை) |
| அறுவடையின்போது இருக்க வேண்டிய இலைகள் | குறைந்தபட்சம் 5 செயல்படும் (பசுமையாக உள்ள) இலைகள் |
| அளவினை நிர்ணயித்தல் (தடிமண் அளவு) | 44 – 46 அளவு (2வது சீப்பின் நடுக்காய்) |
| வாழைக்காய்களின் நீளம் | உரித்த வாழைக்காயின் நீளம் குறைந்த பட்சம் 7 அங்குலம் |
| காய்களின் எண்ணிக்கை / ஒரு சீப்பில் | குறைந்தது 12 |